இலக்கிய இதழியல் முன்னோடிகள்

(முதல் பாகம்)

ஜே.எம். சாலி

இலக்கிய இதழியல்
முன்னோடிகள்

(முதல் பாகம்)

ஜே.எம். சாலி

சமநிலைச் சமுதாயம்
பதிப்பகம்

Ilakkiya Idhazhiyal Munnodigal

•

J.M.Sali

•

First Edition : May 2009

•

All rights reserved. No Part of this publication may be reproduced, Stored in a retrieval system. or transmitted, in any form, or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior permission of the publisher.

•

*Cover Design : **afigrafik***
Typeset by : Nanban Abubaker
Arts : I.M. Ali (Mali)

•

Published by :
Samanilai Samudhayam Publications Pvt. Ltd.
No. 5, Greams Road, Post Box No. : 6262
Thousand Lights, Chennai - 600006
Tel. : 044-28290785, Fax : 044- 24311229

•

Price Rs. 160

பதிப்புரை

○

தமிழ் முஸ்லிம் சமூகத்தில் மிகக் குறுகிய காலத்தில் அபார வளர்ச்சி பெற்ற மாத இதழ் **சமநிலைச் சமுதாயம்.** அவ்விதழில் வெளியான கட்டுரைகள் ஒவ்வொன்றும் முஸ்லிம் சமூகத்தின் எல்லா மட்டத்திலும் பெரிய அளவில் பேசப்பட்டன. மூத்த பத்திரிகையாளர் ஜே.எம். சாலி எழுதி வந்த 'இலக்கிய இதழில் முன்னோடிகள்' தொடர் அந்த வரிசையில் முக்கிய இடம்பிடித்து, வாசகர் மத்தியில் மிகப் பெரிய அளவில் வரவேற்பைப் பெற்றது.

இன்று பிரபலமாக அறியப்படும் ஜனரஞ்சக எழுத்தாளர்களை விட எந்த வகையிலும் தரம் குறைந்திராடாத ஏராளமான எழுத்தாளர்கள் முஸ்லிம் சமூகத்தில் இருந்தனர். அவர்கள் தமிழ் இலக்கியத்திற்கும், மொழிக்கும் அரிய பல சேவைகளைச் செய்துள்ளனர்.

அவர்களில் பெரும்பான்மையானோர் தமிழகத்தில் அன்றிலிருந்து இன்று வரை வெளிவந்து கொண்டிருக்கும் பத்திரிகைகளில் எழுதிக் கொண்டுதான் இருந்தனர். ஆனால், காலப்போக்கில் முஸ்லிம் பத்திரிகைகள் அரிதாகிவிட்ட தாலோ, பிற காரணங்களாலோ அவர்கள் அடையாளம் தெரியாமல் போய் விட்டனர்.

அத்தகையோரை அடையாளப்படுத்துகிற.. ஆவணப்படுத்துகிற மிக முக்கியமான வேலையை ஜே.எம். சாலி செய்து வந்தார். அந்தப் பணியை அவர் ஏனோதானோவென்று செய்யாமல், அனைத்து எழுத்தாளர்களைப் பற்றியும் ஆழமாக அவர்களது படைப்புகளோடும், வரலாற்றோடும் உள்ளோடி பதிவு செய்த விதம், இந்தப் பணியை அழியாத பொக்கிஷமாக மாற்றிவிட்டது.

சமூகத்தால் அடையாளம் காணப்படாத வைரங்களை அடையாளம் காட்டும் முயற்சியாக இது அமைந்தது.

ஜே. எம். சாலி தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு எத்தனையோ படைப்புகளை வழங்கியிருக்கிறார். என்றாலும், இந்தப் படைப்பு அவரது சமகாலத்து எழுத்தாளர்களுக்கும், முன்னோடிகளுக்கும் மிகப் பெரிய நன்றிக்கடனாக அமைந்துவிட்டது.

2004 முதல் இன்றுவரை, சமநிலைச் சமுதாயம் இதழில், மாதம் தவறாமல் வெளிவந்த **இலக்கிய இதழியல் முன்னோடிகள்** தொடர் கட்டுரைகளுக்கு வந்து குவிந்த வாசகர் கடிதங்களின் எண்ணிக்கை அளவிட முடியாதது. அவ்வாறு கடிதம் எழுதுகிற ஒவ்வொரு வாசகரும் இதனை ஒரு நூலாக வெளிக்கொணர வேண்டும் என்று தொடர்ந்து வேண்டி நின்றனர்.

நாமே ஒரு பதிப்பகத்தைத் தொடங்கி, அப்பதிப்பகம் வாயிலாகச் சிறந்த நூல்களைக் கொண்டு வரவேண்டும்; குறிப்பாக, சமநிலைச் சமுதாயம் இதழில் வெளியான சிறந்த கட்டுரைகளின் தொகுப்புக்களை வெளியிடுவது என்று எண்ணம் கொண்டிருந்த எங்களுக்கு, அதன் முதல் முயற்சியாக ஜே.எம். சாலியின் இலக்கிய இதழியல் முன்னோடிகள் தொடரின் முதல் பாகத்தை வெளியிடும் வாய்ப்புக் கிடைத்திருப்பது மிகுந்த பெருமைக்குரிய செய்தியாகும்.

இந்த முதல் பாகத்தில், தமிழில் இலக்கிய-இதழியல் துறைக்குச் சாதனை புரிந்த 30 முன்னோடிகளின் வரலாறு இடம்பெற்றுள்ளது. மற்றுமுள்ள முன்னோடிகள் பற்றிய கட்டுரைகள் அடுத்த தொகுப்பாக இன்ஷா அல்லாஹ் விரைவில் வெளிவரும். மேலும், அவரது மற்ற படைப்புகளும் விரைவில் வெளிவர உள்ளன.

இப்படியோர் அருமையான தொகுப்பை தயாரித்தளித்து அதை எங்கள் பதிப்பகத்தின் சார்பாக வெளியிட வாய்ப்பளித்த ஜே.எம் சாலி அவர் களுக்கும், இக்கட்டுரைகள் வெளியான சந்தர்ப்பத்தில் ஊக்கமும், உற்சாகமும் அளித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும், இந்நூலை அழகுற வடிவமைத்த *'அஃபி கிராபிக்'* நிறுவனத்திற்கும், சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த *'ஜோதி என்டர்பிரைசஸ்'* திரு. த. கணேசமூர்த்தி அவர்களுக்கும் ஏனைய நண்பர் களுக்கும் எங்களின் மனமார்ந்த நன்றி என்றும் உரியது.

- பதிப்பாசிரியர்

ஜே.எம்.சாலி : சில குறிப்புகள்

அல்ஹாஜ் **ஏவி.எம். ஜாபர்தீன்**

'குன்றாத ஆர்வமும் தளராத முயற்சியும் இருந்தால்போதும், ஆண்டவன் அருளால் வாய்ப்புகள் வந்து குவியும்' என்பதற்கு எழுத்தாளர் ஜே.எம். சாலி ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

மாணவப் பருவத்திலிருந்தே எழுதத் தொடங்கிய இந்த நட்சத்திர எழுத்தாளர், இலக்கியத்தில் தொடாத துறையே இல்லை என்று கூறும் அளவுக்கு அனைத்திலும் முத்திரைப் பதித்துள்ளார்.

சிறுகதை, நாடகம், நாவல், கட்டுரை, திறனாய்வு, சரித்திரக் கதைகள், வானொலி, தொலைக்காட்சிகளில் படைப்புகள், மொழிபெயர்ப்புகள் என எழுத்துத் துறையில் பல தடங்களைப் பதித்திருக்கும் ஜே.எம். சாலி, தினசரி, வார, மாதப் பத்திரிகைகளுக்குத் துணை ஆசிரியராகவும், பொறுப்பாசிரி யராகவும் இருந்த பழுத்த அனுபவம் பெற்றவர்.

தொலைக்காட்சி செய்திப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும், 'எழுத்துக்கு இல்லை ஓய்வு' என்று சாலியின் பேனா தன்னுடைய பணியை இன்றும் செய்துவருகிறது. ஜே.எம். சாலிக்கு இப்போது வயது 69.

அரை நூற்றாண்டுக்கும் மேல் ஏறத்தாழ 53 வருடங்களாக எழுதி வரும் இந்த பன்முகப் படைப்பாளர், எளிமையை ஆடையாய் உடுத்திக்கொண்டு 'எழுத்தாளன் என்ற பந்தா' சிறிதுமின்றி எதார்த்தமாக வாழ்ந்து வருபவர்.

திருவாரூர் மாவட்டம் மாயவரத்தை அடுத்த இரவாஞ்சேரியில் 1939 இல் பிறந்த இவர், கும்பகோணம் அரசு கலைக் கல்லூரியில் இளங்கலைப் பட்டமும், சென்னை மாநிலக் கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்றவர்.

தமது 15 ஆவது வயதிலேயே எழுதத் தொடங்கிய ஜே.எம். சாலி, இதுவரை 400 சிறுகதைகள், 80 நாடகங்கள், 30 புதினங்கள், 200 கட்டுரைகள் ஆகியன எழுதியுள்ளார்.

"கலைமகள் குடும்பத்தைச் சேர்ந்த ஆர். வெங்கட்ராமன் என்னை எழுத்தாளராக்கினார். தமிழ்வேள் கோ. சாரங்கபாணி என்னைப் பத்திரிகை யாளராக்கினார்" என்கிற ஜே.எம். சாலி. சிங்கப்பூர் 'தமிழ் முரசு நாளிதழில் 8 ஆண்டுகள், ஆனந்த விகடனில் 10 ஆண்டுகள், 'மயன்' பத்திரிகையில் சில காலம், தமிழ்வேள் மறைவுக்குப் பின்னால் மீண்டும் தமிழ் முரசில் சில காலம் என 20 ஆண்டுகளுக்கும் மேலாக பத்திரிகைப் பணியாற்றியவர்.

"எனக்கு, இலக்கியப் பணி செய்வது வசதியாய் இருந்தது. இறைவன் அருளால் நல்ல உள்ளங்கள் என்னை உருவாக்கிவிடும் வாய்ப்புப் பெற்றேன்" என்று மனம் திறக்கிறார் சாலி.

"இறைவன் அருளால் என் முதல் எழுத்துக்கே ஐந்து ரூபாய் பரிசு கிடைத்தது. 'கண்ணன் பத்திரிகையில் எழுதிய வாசகர் கடிதம் சிறந்ததாகத் தேர்வு செய்யப்பட்டு, அந்தப் பரிசு கிடைத்தது. பிறகு பாலர் கவியரங்த்தில் 'தாஜ்மஹால்' பற்றி எழுதிய கவிதைக்கு மூன்று ரூபாய் பரிசு. அதன் பிறகு எழுதிய 'தேர்தல்' சிறுகதைக்கு பத்து ரூபாய் அன்பளிப்பு. கதைக்குத் தொகை அதிகம் என்பதால்தான் நான் கதை எழுதுவதில் நாட்டம் செலுத்தினேன்" என்று வெள்ளந்தியாய் பேசுகிறார், சாலி.

சாலியின் குடும்பம் ஓர் இலக்கியக் குடும்பம் என்றே சொல்லலாம். குடும்பத்தில் மூத்தவரான ஜே.எம். அபூபக்கர் ஒரு கவிஞர். அடுத்தவர் ஜே.எம். ஹுசைனும் ஓர் எழுத்தாளர்.

"கவிதைக்கு மூத்தவர் இருப்பதாலும், கவிதைக்கு சன்மானம் குறைவு என்பதாலும், கவிதை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கிவிட்டால் எங்கே கர்வம் வந்து தன்னிடமும் ஒட்டிக்கொள்ளுமோ என்ற அச்சத்தாலும் கவிதையி லிருந்து ஒதுங்கிக்கொண்டதாக"க் கூறுகிறார், சாலி.

கவிதை இலக்கணம் நன்கு அறிந்து வைத்திருக்கும் இவர், அகில இந்திய வானொலி நிலையம் நடத்திய கவியரங்குகளில் பங்கு கொண்டு கவிதைகளும் பாடியுள்ளார்.

இதுவரை 50 க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ள சாலி, சமநிலைச் சமுதாயம் இதழில் எழுதிவரும் **'இலக்கிய இதழியல் முன்னோடிகள்'** தொடர், வாசகர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றது.

தம்முடைய தரமான தமிழ்ப் பணிக்காக 'தமிழ்வேள் விருது, (சிங்கப்பூர்

தமிழ் எழுத்தாளர் கழகம்) 'கணையாழி விருது (கவிமாலை அமைப்பு) உள்ளிட்ட பல சிறப்புகளைப் பெற்ற பெருமைக்குரியவர் சாலி.

இவருடைய 'கனாக் கண்டேன் தோழி' 1978 ஆம் ஆண்டின் சிறந்த நாவலுக்கான தமிழக அரசின் விருதைப் பெற்றது.

அதேபோல் இவரின் 'அறிவியில் முன்னோடிகள்' நூல் தமிழக அரசின் சிறுவர் நூலுக்கான பரிசை வென்றுள்ளது.

சிங்கப்பூர் புத்தக மேம்பாட்டு மன்றம் இவருடைய 'நோன்பு' சிறுகதைத் தொகுப்புக்காக பரிசு வழங்கியுள்ளது.

மேலும், இவருடைய பன்முகத் தமிழ்ப் பணியைப் பாராட்டி கடந்த 8.8.2008 அன்று சென்னை கம்பன் கழகம் 'சீறா விருது' வழங்கி கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

ஜே.எம். சாலியின் படைப்புகள் ஆங்கிலம், இந்தி, உருது, சிங்களம் ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 'சாயல்' எனும் சிறுகதைத் தொகுப்பு சிங்கள மொழியில் வெளிவந்துள்ளது.

ஜே.எம். சாலியின் படைப்புகள் பாட நூல்களாகவும் இடம்பெற்றுள்ளன. சென்னைப் பல்கலைக் கழகமும், இராணிமேரி கல்லூரியும் இவரது சிறுகதை களை இளங்கலைப் பட்டப் படிப்புக்குப் பாடமாக வைத்திருந்தன.

'வெள்ளைக் கோடுகள்' நாவலை, கோழிக்கோடு பல்கலைக் கழகம் பாட நூலாக வைத்திருந்தது. தற்போது அவரது 'ஜே.எம். சாலி சிறுகதைகள்' நூல் சென்னைப் புதுக் கல்லூரி தமிழ்ப் பாடப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஜே.எம். சாலியின் சிறுகதைகளையும், நாவல்களையும் ஆய்வு செய்து மூவர் எம்.பில்., பட்டமும், ஒருவர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

சைவம், வைணவம், கிறித்துவம் பற்றியும் எழுதுபவர் சாலி. இவருடைய 'ஒரு கிளைப் பறவைகள்' நூல் சமய ஒற்றுமையையும், சமூக ஒற்றுமையையும் சொல்லும் நூல் ஆகும்.

தமிழில் இஸ்லாமியச் சமூகத்தின் வாழ்புலம், பண்பாடு, வழக்காறுகள் ஆகியவற்றை உரிய முறையில் கருத்துத் தெளிவுடன் இலக்கியக் கலையாக்க மாக வெளிப்படுத்தும் மரபின் தொடக்கமாக சாலி இருந்து வருகிறார் என்றால் அது மிகையல்ல. ●

அணிந்துரை

முத்துக்கள் முப்பது

– ஈரோடு தமிழன்பன்

○

திரு. ஜே.எம். சாலி தமிழர்களால் நன்கு அறியப்பெற்ற ஓர் எழுத்தாளர் என்பதையும் தாண்டி, பரிமாணங்கள் சிலவற்றைப் பெற்றிருப்பவர்.

அடக்கம், அமைதி, எளிமை, இனிமை என்னும் மானுட விழுமியங்களைத் தம் வாழ்க்கையில் நடைமுறைகளினால் அர்த்தப்படுத்திக் கொண்டு வாழ்ந்து வருபவர். இயல்பு நிலையிலும் இயங்கு நிலையிலும் ஓர் எடுத்துக்காட்டான இவருக்குள், கதையாசிரியன், நாடகச் சிற்பி, கட்டுரையாளன், இதழாசிரியன் எனப் பலரும் இருக்கின்றனர்.

வரலாற்று ஆசிரியர் ஒருவர் முன்சொன்ன பட்டியலில் இருப்பவர்களோடு இணைந்து கொள்வதை "இலக்கிய இதழியல் முன்னோடிகள்" என்னும் இந்நூல் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் இலக்கிய வரலாற்றோடு பின்னிப்பிணைந்து வளர்ந்துவந்துள்ள ஓர் இன்றியமையா அங்கமெனினும், பொதுநிலைத் தமிழ் இலக்கிய வரலாறு என்று பேசப்படும் போதெல்லாம் பெரிதாக எடுத்துக்கொள்ளப்படாத குறை நெடுங்காலம் இருந்துவருகிறது.

ஆயின், இஸ்லாத்திற்குத் தமிழின் பங்கும், தமிழ் இலக்கிய வளத்திற்கு இஸ்லாத்தின் பங்கும் இன்றுவரை முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுவிட்டதாகக் கூறமுடியவில்லை.

இஸ்லாமிய இலக்கியங்களின் வளம் செறிந்த முதன்மைத் தளங்களாக இருப்பனவாக அரபு, பாரசீகம், துருக்கி ஆகிய மொழிகளைக் குறிப்பிடுவது வழக்கம். இவற்றுக்கு அடுத்த நிலையில் வைத்துக் கணிக்கத்தக்கவை என்று உலகளாவிய நிலையில் இருபது மொழிகளைக் குறிப்பிடுகிறவர்கள், அவற்றில் ஒன்றாகத் தமிழ்மொழியைச் சுட்டிக் காட்டுகின்றனர். *(Anthology of Islamic Literature, Edited by James Kritzeck, Penguin Books, 1964, P.16).*

எனவே, உலக இஸ்லாமிய இலக்கிய வரலாற்றிலேயே இடம் பெறத்தக்க அளவில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் மேலோங்கி மிளிர்வதைக் கருதிப் பார்த்துத் தமிழ் மக்கள் பெருமிதம் கொள்ளலாம்.

தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட சைவருக்கோ, வைணவருக்கோ, கிறித்தவருக்கோ மற்றும் எந்த மதத்தவர்க்கோ உள்ள தமிழ்ப்பற்றைவிட, எந்த வகையிலும் குறைந்ததன்று, முஸ்லிம் தமிழ் மக்களின் தமிழ்ப்பற்று என்பதை,

1. **தமிழ்மொழி வரலாறு**
2. **தமிழ் இலக்கிய வரலாறு**
3. **தமிழ்ச் சமுதாய வரலாறு**
4. **தமிழ்நாட்டு அரசியல் வரலாறு**

ஆகிய எல்லாத் தளங்களிலும் ஆய்வுப் பார்வையைச் செலுத்துபவர்கள் உறுதியாக அறிய முடியும்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு நாடுகள் என எல்லை விரிந்த மரபுகளிலே வைத்துப் பார்க்கவும் மதிப்பீடு செய்யவும் தக்கது.

தமிழில் உள்ள இலக்கிய வடிவங்களை, வகைமைகளைத் திறம்படக் கையாண்டதோடு, அரபு, பாரசீக, மொழிகளில் அமைந்த இலக்கிய

வடிவங்களையும், வகைமைகளையும் தமிழில் படைத்து ஆக்கம் சேர்த்த பெருமைக்குரியவர்கள் இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் படைப்பாளிகள்.

பின்னணியாக இக்கருத்துக்களையெல்லாம் உளம்கொண்டு திரு. ஜே.எம்.சாலி எழுதியுள்ள இலக்கிய இதழியல் முன்னோடிகள் என்னும் இந்நூலைப் படித்தபோது கைதேர்ந்த எழுத்துத் திறன்வாய்ந்த நூலாசிரியராகிய அவரைப் பாராட்டுவதா, அப்படிப்பட்ட அவருடைய திறமையை வெளிப்படுத்த உந்துசக்தியாக இருந்து அவரை இயக்கிய அந்த முன்னோடிகளைப் பாராட்டுவதா என்று வியப்பைக் கடைந் தெடுக்கும் வினாவையே நான் எதிர்கொள்ள நேர்ந்தது.

முஸ்லிம் படைப்பாளிகள் சிறுகதை, புதினம், கவிதை, பாடல், காப்பியம், நாடகம், கட்டுரை, திறனாய்வு எனப் பல்வேறு தளங்களில் இயங்கி வரலாறு படைத்திருக்கின்றனர் என்பதோடு, இதழியல், அரசியல், மார்க்கவியல், சமுதாயவியல் பார்வைகளில் செயல்பட்டிருக் கின்றனர் என்பதையும் இத்தொகுப்பு எண்பிக்கிறது.

தமிழோடு இஸ்லாத்தையும், இஸ்லாத்தோடு தமிழையும் இவர்கள் வளர்த்துள்ளனர்.

ஒவ்வொரு கட்டுரைக்கும் அவர் எடுத்துக்கொண்டிருக்கிற உண்மை யான முயற்சி - தேடல் - திரட்டல் - தொகுத்தல் - வகுத்தல் - எல்லாமே பாராட்டத்தக்கவை என்பது மட்டுமில்லை, ஓர் எழுத்தாளன் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் என்றும் சொல்லலாம்.

அவருக்கு இருக்கிற எழுத்து வல்லமை, திரட்டிய தரவுகளைக் கொண்டு அழகிய ஈர்ப்பாற்றல் நிறைந்த கட்டுமானத்தைச் சாதித்து வெற்றி கண்டிருப்பதை ஒவ்வொரு கட்டுரையிலும் ஏதேனும் ஒரு வகையில் எவரும் காண முடியும். இதழியல் அனுபவம், அவருக் குரிய வாசகத் தளத்தை எளிமையாக உருவாக்கிச் 'சென்றடைதலை' ஒவ்வொரு சொல்லுக்கும் சிறப்பான முறையில் உரிமைப்படுத்தி வைத்திருக்கிறது.

பழம்பெரும் புலவர் நக்கீரர் குலாம் காதிறு நாவலர் முதல் நவீன இலக்கியப் படைப்பாளி 'ஜேயெம்' வரையிலான இஸ்லாமியத் தமிழ்ப்

படைப்பு ஆளுமைகளை - தலைநிமிர்ந்து ஒளிரும் அவர்களின் தனிச் சிறப்புகளை நமக்கு ஜே.எம். சாலி பொருத்தம் சிதையாத போக்கில் இந்நூலில் அறிமுகம் செய்துவைக்கிறார்.

நாம் அறிந்திருக்கும் ஆளுமைகள் சிலரின், நாம் அறியாப் பரிமாணங்களை இந்நூல் வெளிப்படுத்துகிறது.

எடுத்துக்காட்டாக, முதல் பெண் எழுத்தாளர் சித்தி ஜுனைதாவின் காதலா? கடமையா? என்னும் நாவலுக்கு (1938) எழுதப்பட்டடுள்ள தமிழ்த் தாத்தா உ.வே.சா.வின் மதிப்புரையையும், சிறுகதை மன்னன் புதுமைப்பித்தனின் விமர்சனத்தையும் குறிப்பிடலாம்.

இன்னுமோர் எடுத்துக்காட்டு வேண்டுமெனில், டி.எம்.எம். அகமது என்கிற இயற்பெயரை மறைத்துக்கொண்டு சுடர்விடுகிற 'சாரணபாஸ்கரன்' என்ற புனைபெயரை அப்படைப்பாளிக்கு வழங்கியவர், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் (1937) என்பதைச் சுட்டிக்காட்டலாம்.

இத்தகைய செய்திகளை இஸ்லாமிய இலக்கிய உலகில், அல்லது சமுதாயச் சூழலில் முஸ்லிம்கள் அறிந்து வைத்திருக்கக் கூடும். புலமைசார் படிப்பறிவு போதிய அளவு இல்லாத முஸ்லிம்களுக்கும், முஸ்லிம் அல்லாத பெருமக்கள் பரப்பில் இருப்பவர்களுக்கும் இத்தகைய அரிய தகவல்கள் அறிவுப் பயன்களுக்கு அப்பாலும் பயன்கள் பலவற்றை விளைவிக்கும் என்பது என் கணிப்பு.

இவ்வளவுக்கும் இக்கட்டுரைகள் இஸ்லாமிய இலக்கிய முன்னோடிகளின் முழுமையான வரலாற்றை வெளிப்படுத்துவன அல்ல. ஒவ்வொன்றும் ஒவ்வொரு நூலாக விரிவடைவதற்கான வாய்ப்புகளை உடையது. சிறிய அளவிலான கட்டுரைகளுக்கு உள்ளேயே ஜே.எம். சாலி இப்படிப்பட்ட கருத்துமணிகளை அள்ளித் தெளித்து நம்மை நூலுக்குள் சிறைப்படுத்துகிறார் என்பதே நாம் இங்கு உணர்ந்து மகிழ வேண்டியதாக உள்ளது.

கட்டுரைகளைத் தொடங்குவது, வளர்த்தெடுப்பது, முடிப்பது என்கிற படிநிலைகளில் ஜே.எம். சாலி பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று இசைப்பாடல்களில் காண்பது போன்ற ஓர் இனிய பரிமாணத்தைக் கையாண்டிருப்பதைப் பாராட்டலாம்.

எனினும், திரும்பப் பல்லவி பாடலாக கூறியது கூறும் பண்பு எங்குமே தலைகாட்டவில்லை. ஓர் இணைவும், இசைவும், கட்டமைப்பு ஒழுங்குமே பாடல் மரபோடு இக்கட்டுரைகளைச் சமன்படுத்திப் பார்க்க நம்மைத் தூண்டுகின்றன.

ஆர்வத்தைக் கிளரும் சில கட்டுரைத் தொடக்கங்கள் :

அ). வழக்கு விசாரணை நடைபெறுகிறது.

9 ஆம் சாட்சியான மூக்கு சத்தியம் செய்து தெரிவித்த வாக்குமூலம்

'சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாட்சியாக நான் சொல்வ தெல்லாம் உண்மை'.

'உனது பெயர் யாது?'.

'மூக்கு'.

- இப்படித் தொடக்கத்திலேயே புதிர்போடும் வார்த்தைகளுக்குப் பின்னால் தனிப்பெரும் பாவலர், பன்னூலாசிரியர், பதிப்பாசிரியர், பத்திரிகையாளர், போதகாசிரியர், உரையாசிரியர், சொற்பொழிவாளர், அவதான ஆசிரியர், இலக்கண இலக்கிய விமர்சகர், பல்துறைப் பயிற்சி ஆய்வாள வித்தகர் - சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர் தோற்றம் அறிமுகமாகி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

"மாலையில் கல்லூரி விட்டதும் சைக்கிளில் ஏறி வீட்டுக்குப் புறப் பட்டான் சுலைமான். அவன் வாய், சினிமாப் பாட்டொன்றை முணு முணுத்துக்கொண்டிருந்தது" இப்படிச் சுவையான கதை வரிகளின் தொடக்கத்தோடு ஜே.எம். சாலி கட்டுரையைத் திறந்து கொண்டு முன் வருகிறார் - *(மஹ்றதி)*

"ஐந்து வயதில் விக்ரமாதித்தன் கதையைக் கேட்டு, அந்த ரசனையில் பன்னிரெண்டாம் வயதில் நூலகத்தில் அதைப் புத்தகங்களாகப் படிக்கத் தொடங்கி, அடுத்த சில ஆண்டுகளில் சிறுகதை எழுத ஆரம்பித்தார் திருப்பத்தூரைச் சேர்ந்த அந்த இளைஞர்!"

இப்படி கட்டுரை தொடங்கியவுடன் 'யார் இந்த இளைஞர்' என்கிற வினா வேகமாகப் படிப்பவர் உள்ளத்தில் முளைத்துவிட, கட்டுரை

யாளர் அவர் யார் என்று உடனே சொல்லிவிடாமல், *"எழுத்தாளரான கதையை அவரே சொல்கிறார் :"*

என்று மேலும் ஆர்வத் துடிப்பை வளர்த்தெடுத்துக்கொண்டு போகிறார். திருப்பத்தூர் வி.நூர் முகம்மதுவைச் சந்திக்கும்வரை படிப்பவர் மனம் படபடக்கவே செய்யும், கட்டுரைத் தலைப்பில் அவர் பெயர் இல்லாமல் இருந்திருந்தால்.

இப்படித்தான் கட்டுரைகள் சிலவற்றின் முடிவுகளிலும், சில நயப் பாடுகளை ஜே.எம். சாலி சிற்பம் செதுக்குவதுபோலச் செய்திருக்கிறார்.

எடுத்துக்காட்டாக :

1. ஆ.க.அ. அப்துஸ் ஸமது பற்றிய கட்டுரை 'சீர்மிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர். சமுதாயத் குரலை நாளும் முழங்கிய நாவலர். இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தலைவர், திருக்குர்ஆன் மொழி பெயர்ப்பில் பங்கேற்ற பண்பாளர். இஸ்லாம் எங்கள் வழி; இன்பத் தமிழ் எங்கள் மொழி' என்ற வரிவடிவத்திற்குச் சொந்தக்காரர்.

2. "தமிழ் முஸ்லிம் சிறுகதைகளின் பிரம்மாக்களில் ஒருவராய்க் குறிப்பிடப்படும் இவர் காலமாகிவிட்டாலும் அழியாத கோலங்களை வரைந்துவிட்டுச் சென்றிருக்கிறார்" என்று கவிஞர் தாராபாரதி தம்முடைய விமர்சனத்தில் குறிப்பிட்டிருக்கிறார். பொருத்தமான மதிப்பீடு; ஆமாம் 'ஜேயெம்' எழுதியுள்ள சிறுகதைகளும் தொடர் கதைகளும் சமூகத்தின் கண்ணாடிகள்தாம்". இப்படி முடிக்கிறார் தம் சகோதரரும், தலைசிறந்த படைப்பாளியுமான சிறுகதைச் செல்வர் ஜேயெம் குறித்த கட்டுரையை.

பேராசிரியர்கள் மு. அப்துல் கரீம், செ. பசுலு மொய்தீன், ஓ.அ. காஜா மொய்தீன், இ. ஹம்சா, ஹ.மு. நத்தர்சா, இ. அகம்மது மரைக்காயர் போன்ற முஸ்லிம் சமுதாய ஆய்வாளர்களின் மதிப்பீடுகளும், மேற் கோள்களும் இடம்பெற்றிருப்பதுபோலவே, பேராசிரியர் சாலை இளந் திரையன், இலக்கியத் திறனாய்வாளர் வல்லிக்கண்ணன், கதாசிரியர் ஜெகசிற்பியன் போன்றோரின் தகுதியான உரைகல் உரைகளும் இடம்பெறுமாறு ஜே.எம். சாலி கவனமாகச் செயல்பட்டிருப்பதை இந்நூல் நமக்கு நன்கு புலப்படுத்துகிறது.

ஆயினும், மேற்கோள்களை வலிந்து திணித்து கட்டுரைகளைப் பாரம் ஏற்றும் வண்டியாக மாற்றாமல், அளவறிந்து அவற்றைப் பயன் படுத்தியிருக்கும் ஜே.எம். சாலியின் திறம் சாலச்சிறந்தது என்பேன்.

இக்கட்டுரைகளில் இடம்பெற்றுள்ள இதழ்கள், நூல்கள் குறித்த காலக் குறிப்பு மற்றும் வெளியீட்டுக் குறிப்பு ஆகியன அடங்கிய நிரல் – இத்தொகுப்பை முழுமைப்படுத்தும் என நம்புகிறேன்.

பொதுவாக, கட்டுரைகள் அவற்றை எழுதும் ஆசிரியன், தொடங்கும் முன் ஒன்றாகவும், தொடங்கிய பின் வேறொன்றாகவும், முடித்தபின் இவையிரண்டும் அல்லாத பிறிது ஒன்றாகவும் இன்னின்ன திருத்தங் களைச் செய்திருக்கலாம் என்று கருதித் தவிக்கும்போது, முன் சொன்ன வற்றுக்கு எல்லாம் அப்பால் மற்று ஒன்றாகவும் மாறிவிடுவதுண்டு.

என் நண்பர் ஜே.எம். சாலி எழுதி 'சமநிலைச் சமுதாயம்' இதழில் வெளி வந்துள்ள இக்கட்டுரைகள் யாவும், அவர் எண்ணிய எண்ணியாங்கு வெளிப்பட்டிருப்பதாக வெற்றி பெற்றிருப்பதாக நான் நம்புகிறேன்.

'சமநிலைச் சமுதாய' மேடையில் அவர் வைத்த முப்பது முத்துக் களும் ஆரமாக்கப்பட்டு, நமக்குக் கிடைத்திருக்கிற இத்தருணத்தில் அணிந்தும் அணிவித்தும் மகிழ அனைவரையும் ஆசையோடு அழைக்கிறேன்.

சென்னை
19.4.2009

அன்புடன்,
ஈரோடு தமிழன்பன்

முன்னோட்டம்

– ஜே.எம். சாலி

○

தமிழ் முஸ்லிம்களின் வரலாறு தனித்தன்மை வாய்ந்தது. "இஸ்லாம் எங்கள் வழி. இன்பத் தமிழ் எங்கள் மொழி" என இன்று முழங்குகிறோம்.

ஆனால், ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் இந்த முழக்கம் எழுந்துவிட்டது.

ஒன்பதாம் நூற்றாண்டில் பாண்டிய மன்னனின் அமைச்சராக இருந்த மாணிக்க வாசகர், தமிழ் முஸ்லிம்களின் மாண்பைப் பாடியிருப்பது நாம் அறிந்ததே.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம் குதிரை வீரர்களாக ராவுத்தர்களும், மரக்கலம் ஓட்டிய கடல் வணிகர்களாக மரைக்காயர்களும் செல்வாக்கு மிக்கவர்களாக அந்த நாளிலேயே இருந்தனர் என்பது வரலாறு.

இனத்தாலும், மரபாலும், பண்பாட்டாலும் இவர்கள் 'தமிழர்கள்' என்று ஆய்வாளர்கள் போற்றுகின்றனர்,

முஸ்லிம் மன்னர்கள், பன்னிரெண்டாம் நூற்றாண்டில் வடமேற்கி லிருந்து இந்தியாவுக்குப் படையெடுத்து, ஆட்சியைப் பிடிப்பதற்கு முன்பே தென்னகத்தில் இஸ்லாம் வேரூன்றிவிட்டது. அதை ஏற்றுக்கொண்ட சமூகத் தினரே தமிழ் முஸ்லிம்கள். பதினோரு நூற்றாண்டுகளுக்குப் பிறகு

இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் தோன்றத் தொடங்கின. அதற்கு அறுநூறு ஆண்டு கால வரலாறு உண்டு என்பது நாம் அறிந்ததே.

தமிழ் முஸ்லிம்களின் வரலாறு முறையாக இன்னும் எழுதப்படவில்லை. ஆனால், இலக்கிய வரலாறு இயன்றவரை எழுதப்பட்டுள்ளது.

நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு முஸ்லிம்களின் தமிழ் இலக்கியங்கள் நன்கு அறியப்பட்டிருக்கவில்லை.

சீறாப்புராணம், மஸ்தான் சாகிபு பாடல் ஆகியவை மட்டுமே தொட்டுக் காட்டப்பட்டு வந்தன. முஸ்லிம் தமிழ் இலக்கியங்களின் பட்டியலோ, அறிமுக நூல்களோ அப்பொழுது கிடைக்கவில்லை.

அறிமுக நூல் என்ற முறையில் எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை 1942 ஆம் ஆண்டில் எழுதிய 'நபிநாயகமும் கவிவாணர்களும்' என்ற நூல் குறிப்பிடத்தக்கது.

அதற்குச் சில ஆண்டுகளுக்குப் பிறகு நீதிபதி மு.மு. இஸ்மாயில் அவர்கள் எழுதிய நீண்ட கட்டுரை ஒன்று இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களை அறிமுகப்படுத்தியது.

இலங்கை பேராசிரியர் டாக்டர் உவைஸ் அவர்கள் இந்தத் துறையில் ஆற்றிய பணி அளப்பரியது. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு முஸ்லிம்கள் அளித்த பங்கை ஆராய்ந்து தமிழிலும், ஆங்கிலத்திலும் நூலாக வெளியிட்ட பெருமை அவரையே சாரும்.

பன்னூலாசிரியர் எம்.ஆர்.எம். அப்துற்-றஹீம் அவர்களின், 'முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள்', பனைக்குளம் பண்டிட் அப்துல் மஜீத் அவர்களின் 'தமிழ்நாட்டு இஸ்லாமியப் புலவர்கள்' முதலான நூல்கள் அடுத்தடுத்து வந்தன.

இந்தப் பணியில் ஈடுபட்ட ஆய்வாளர்கள், எழுத்தாளர்களின் பட்டியல் நீளமானது. டாக்டர் உவைஸ், டாக்டர் அஜ்மல்கான் ஆகியோர் பல தொகுதிகளாக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றைத் தொகுத்து மதுரைப் பல்கலைக் கழகத்தின் பதிப்பாக வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களை அறிமுகப்படுத்திய அனை வரையும் நினைவுகூர்ந்து சிறப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியாவுக்கே ஆட்சி மொழியாகும் தகுதி தமிழுக்கே உண்டு" என்று அரசியல் நிர்ணய சபையிலே ஆணித்தரமாக முழக்கமிட்டவர், கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்கள். அவர்களின் தமிழ்ப் பற்றை நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல; கடல் கடந்த நாடுகளிலும் தமிழைக் காப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தவர்கள் தமிழ் முஸ்லிம்கள்.

இலங்கை வரலாறு நாம் அறிந்தது; விவரிக்கத் தேவையில்லை. சிங்கப்பூர், மலேசிய வரலாற்றை எடுத்துக்கொண்டால் அங்கே தமிழ் முஸ்லிம்கள் ஆற்றிய முன்னோடி மொழி, இலக்கியப்பணி வியப்பில் ஆழ்த்துகிறது.

'தமிழ்ச் சிறுகதை இலக்கியத்துக்கு முன்னோடி யார்?' என்று கேட்டால் தமிழ்நாட்டில் வ.வே.சு. ஐயர் தொடங்கி, சிலரின் பெயரைச் சொல்வோம்.

அவர்களுக்கு முன்பே 1887 ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் தமிழ்ப் பத்திரிகை நடத்தி கதை இலக்கியத்துக்குத் தடம் அமைத்தவர், மகுதூம் சாயபு என்ற தமிழ் முஸ்லிம் அறிஞர்.

மொரிஷியஸில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் இந்தக் கருத்தை சிங்கப்பூர் எழுத்தாளர் ஒருவர் வலியுறுத்தினார்.

'சிங்கை நேசன்', 'தங்கை நேசன்' முதலான பத்திரிகைகளை சிங்கப்பூரிலும், பினாங்கிலும் நடத்தி முன்னோடியாக விளங்கியவர், மகுதூம் சாயபு.

தமிழ் முஸ்லிம்களின் இத்தகைய முன்னோடிப் பணிகள் அனைவருக்கும் எட்டவில்லை. காரணம், நம்மிடையே வரலாற்று ஆர்வம் இல்லை.

மொழி, இலக்கிய ஆய்வாளர்கள் முஸ்லிம்களின் பணிகளைப் பற்றி குறிப்பிடுவதில்லை என்ற குறைகூறல் உண்டு. ஆதாரங்களும், குறிப்பு களும் கிடைக்காததால்தான் அவை விடுபட்டுப் போகின்றன என்பதை மறுக்க முடியாது.

இதன் தொடர்பில் முன்னைய இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகள்

விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆயினும், இன்னும் பல பணிகளை நாம் செய்து முடிக்க வேண்டும்.

இருக்கும் இலக்கியங்களைப் பாதுகாப்பதும், புதியவற்றைப் படைப்பதும் முக்கிய பணி.

இந்த நற்பணிக்கு "ஏவி.எம். ஜாபர்தீன்-நூர்ஜஹான் அறக்கட்டளை'யின் நிறுவனரும், 'சமநிலைச் சமுதாயம்' இதழின் கௌரவ ஆசிரியருமான அல்ஹாஜ் ஏவி. எம். ஜாபர்தீன் உந்துசக்தியாகத் திகழ்ந்து வருவதை தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும்.

'சமநிலைச் சமுதாயம்' ஆறு ஆண்டுகளுக்குமுன் தொடங்கப்பட்ட போது இலக்கிய, இதழியல் முன்னோடிகளின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளைப் பதிவு செய்யும் விருப்பத்தை வெளியிட்டார்.

அந்தத் துறையில் எனக்குத் தொடர்பு இருந்து வருவதால் பணியைத் துவங்கும்படி அவர் அன்புக் கட்டளையிட்டார், சிங்கப்பூர் சந்திப்பின்போது.

இறையருளால் இயன்றதைச் செய்து முடிக்க உறுதி எடுத்துக் கொண்டேன்.

இலக்கிய இதழியல் முன்னோடிகள் தொடரை வரவேற்று, வாசக அன்பர்கள் எழுதிவரும் கடிதங்கள் புத்துணர்ச்சியைத் தருகின்றன. அவர்களின் சில கருத்துகளை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

• *சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர்தான் அண்ணாவுக்கு 'அறிஞர்' என்ற பட்டத்தைக் கொடுத்தார் என்பதை வாசித்தபோது அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. தமிழ்நாட்டில் பலருக்கும் தெரியாத ரகசியத்தைப் போட்டுடைத்துள்ளார், ஜே.எம். சாலி.*

– எம். ராஜா முஹம்மது, நாகர்கோவில்.

• *ஜே.எம். சாலி அவர்களின் கவி கா.மு. ஷெரிப் குறித்த கட்டுரை வாசித்தேன். மறைந்த கவிஞர் கா.மு. ஷெரிப் அவர்கள் 'ஆன்மீகத்தின் பிரதிபலிப்பே' என்று ஜே.எம். சாலி அவர்கள் கட்டுரையில் குறிப்பிட்டது உண்மையே. மறைந்த கவி கா.மு. ஷெரிப் அவர்கள் பட அதிபர் எம்.ஏ. வேணுவின் இதயத்தில் கொலுவிருந்தவர். இத்தனை வாய்ப்பு பெற்று இருந்தும் கடைசிவரை வாடகை வீட்டில்தான் குடியிருந்தார். அல்லாஹ்*

வின் தூதர் ஓர் அழகிய முன்மாதிரி என்று திருவசனம் தெரிவிக்கிறது. அந்த முன்மாதிரியைப் பின்பற்றிய இவரும் ஒரு முன்மாதிரிதான்.

- அ. அப்துல் ரசாக் சிஷ்தி ஹுமீதி, கோவளம், சென்னை.

• 'இலக்கிய இதழியல் முன்னோடிகள்' தொடரில் திருச்சி ரசூல் பற்றி சமுதாய மக்களுக்குத் தெரியாத பல செய்திகளை வெளிப்படுத்தி இருக்கிறார் கட்டுரையாளர், ஜே.எம். சாலி. 50 வருடங்களுக்கு மேலாக ரசூல் எழுதிய நூல்களை நினைவுபடுத்தி எழுதியிருப்பது அவரது நினை வாற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

ரசூல் 'மிஸ்டர் கொட்டாப்புளி' எனும் புனைப்பெயரில் இலங்கையி லிருந்து வெளிவந்த 'இஸ்லாமிய தாரகை'யில் எழுதி வந்த அனல் பறக்கும் அரசியல் கட்டுரை விறுவிறுப்பாக இருக்கும். அந்த 'கொட்டாப்புளி' திருச்சி குலாம் ரசூல் சாஹிப் என்பது இப்போதுதான் தெரிகிறது.

- ஹாஜி எஸ்.டி..ஏ. முஹம்மது மீரான், சென்னை.

• புலவர் ஆபிதீன் குறித்த கட்டுரை ஆச்சரியத்தை அளித்தது. ஏன் அவருடைய படைப்புகளை விளம்பரப்படுத்தாமல் மறைத்தார்கள்? நம் சமுதாயம் கற்றவரை கண்ணியப்படுத்தாததால் அவர்கள் உழைப்பு வீணாய்ப் போய்விட்டன.

பொதுவாக யாராவது சாதனை செய்தால் அதை பாராட்டும் மனப் பக்குவம் நம்மிடையே இல்லை. ஆனாலும், தீவிரமாக விமர்சனம் செய்வோம். நாகூர் புலவர் ஆபிதீன் அவர்களது புகழ் ஓங்க புதிய தலை முறையினர் முயற்சி எடுக்க வேண்டும்.

- நாகூர் மீரா, ஷார்ஜா, யு.ஏ.இ.

• இக்கால இளைஞர்களுக்கு முன்னோடி எழுத்தாளர்களின் சேவை யினை நயம்பட எழுதிவரும் பன்னூலாசிரியர் ஜே.எம். சாலி அவர்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள். இம்மாத இதழில் சமுதாய மணிவிளக்கு ஆ.கா.அ. அப்துஸ் ஸமது சாஹிப் குறித்து ஸ்கேன் செய்து எழுதியிருப்பது பாராட்டுக்குரியது. 'சமநிலைச் சமுதாயம்', மணிவிளக்கு இதழ்போல் இலக்கிய நயத்துடன் வெளிவருவது வரவேற்கத் தக்கது. இதழின் மற்ற பகுதிகளும் சிறப்பாக உள்ளன.

- ஆலிமான் ஆர்.எம். ஜியாவுதீன், மண்ணடி, சென்னை.

• 'எழுத்து வேந்தர்' சகோ. ஜே.எம். சாலி நமது இதழில் தொடராக எழுதி வந்த இலக்கிய இதழியல் முன்னோடிகள் தொடர், நூல் வடிவில் வருவதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அத்தொடர் மூலம் இன்றைய என் போன்ற இலக்கிய ஆர்வலர்கள், வாசிப்பை நேசிப்பவர்கள், சென்ற தலைமுறை எழுத்துலக மன்னர்களை அறியவும், உணரவும் முடிந்தது.

கதைகள், கட்டுரைகள், புதினங்கள், தீட்டுவதைவிடவும் வரலாற்றுத் தொடர்புடைய இதுபோன்ற தொடர்களை எழுதுவது அவ்வளவு எளிதான காரியமல்ல என்பதை அறிய முடிந்தது. இந்த இதழில் முஸ்லிம் முரசு நிறுவனர் மறைந்த எஸ். அப்துர் ரஹீம் அவர்களைப் பற்றிய தொடரால் முஸ்லிம் முரசின் முகவரியை மீண்டும் அறிய முடிந்தது.

– கே.எம்.எஸ். ஹாஜா பதுருத்தீன், கூத்தாநல்லூர்.

• சரித்திர ஆசிரியரும், மெஹ்ஜபின், சிந்து நதிக்கரையினிலே போன்ற நூல்களை எழுதியவருமான செய்யது முஹம்மது 'ஹஸன்' குறித்து ஜே.எம். சாலி எழுதியதை வாசிக்கும்போது ஹஸனை நேரில் பார்ப்பதுபோன்ற உணர்வு ஏற்பட்டது.

60 வருடங்களில் முன்னோடி எழுத்தாளர்களின் வாழ்க்கை வரலாற்றை, அவர்கள் எழுதிக் குவித்த எழுத்தோவியங்களை இளைய தலைமுறையினரும் அறிந்துகொள்ள எழுதிக்கொண்டிருக்கும் சாலியை எவ்வளவு பாராட்டினாலும் தகும். பெரும்பாலும் காலம் சென்றவர்கள் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளைக் கோர்வையாக எழுதி நம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்துகிறார்.

முதும்பெரும் எழுத்தாளர்கள் பற்றி இவ்வளவு துல்லியமாக எழுதி, அதற்கான ஆதாரங்களையும் தேடிப் பிடித்து, அவர்கள் இலக்கியத்திற்கு ஆற்றிய சேவைகளை அழகுறத் தொகுத்து எங்களைப் பரவசப்படுத்துகிறார். எஞ்சிய பழம்பெரும் எழுத்தாளர்களையும் அறிமுகப்படுத்தி வைக்க இறைவன் அவருக்குப் பூரண சுகத்தையும், நீடித்த ஆயுனையும் தர பிரார்த்திக்கிறேன். 35 இஸ்லாமிய இலக்கியவாதிகளை அறிமுகப்படுத்தி, யாரும் செய்யமுடியாத சாதனை புரிந்துள்ளீர்கள். இது விரைவில் நூல் வடிவில் வெளிவர வேண்டும்.

– அப்துல் ஜலீல், மேலக்கொடுமலூர்.

• *'இலக்கிய - இதழியல்' முன்னோடிகள் தொடரில் ஜே.எம். சாலி எழுதிய சாதனை படைத்த மேதை அபுல் ஹஸன் ஷாதலி ஹஜ்ரத் (ரஹ்) அவர்கள் பற்றிய வாழ்க்கை சுருக்கம் மிக அருமை.*

மூத்த எழுத்தாளர் ஜே.எம். சாலியின் இத்தொடரை சமநிலைச் சமுதாயமே முன்வந்து புத்தகமாக வெளியிடவேண்டும். மேலும் சந்திப்புக் கூட்டம் ஏற்பாடு செய்து சிறந்த முஸ்லிம் எழுத்தாளர்களுக்கும், சிறந்த விமர்சகர்களுக்கும் விருது வழங்கி கவுரவிக்க வேண்டும் என்பது என் போன்ற வாசகர்களின் வேண்டுகோள்.

- ஏ.எஸ். தையிப் தாவுதி, ஈரோடு.

இலக்கிய, இதழியல் முன்னோடிகள் - முதல் தொகுதி சமநிலைச் சமுதாயம் பதிப்பகம் சார்பில் உங்கள் கரங்களில் தவழ்கிறது.

எண்ணற்ற கடிதங்களை எழுதி இந்த நற்பணிக்குத் தூண்டுகோலாக அமைந்த நேசமிகு வாசகர்களுக்கு சமநிலைச் சமுதாயத்தின் சார்பில் மனம் நிறைந்த நல்லன்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிங்கப்பூர்
13.03.2009

அன்பன்,
ஜே.எம். சாலி

பொருளடக்கம்

1. நக்கீரர் குலாம் காதிறு நாவலர் / 27
2. சிங்கைநேசன் சி.கு. மகுதூம் சாயபு / 43
3. சதாவதானி செய்குத்தம்பி பாவலர் / 55
4. பத்திரிகை ஆசான் பா. தாவூத் ஷா பி.ஏ. / 69
5. மதுரை மரைக்காயர் / 83
6. நூருல் இஸ்லாம் முஹம்மது யூசுப் பாக்கவி / 95
7. உத்தமபாளையம் எஸ்.எஸ். அப்துல் காதிர் பாகவி / 107
8. அறிஞர் கரீம் கனி / 119
9. இலக்கியவாதி மஹதி / 131
10. கலைமாமணி கவி கா.மு. ஷெரீப் / 143
11. இலக்கியக் கனி ஆர்.பி.எம். கனி / 155
12. முதல் பெண் எழுத்தாளர் சித்தி ஜுனைதா / 165
13. செம்மொழிப் புலவர் ஆபிதீன் / 177
14. இதழியல் முரசு எஸ்.ஏ. ரஹீம் / 187
15. கலைக்களஞ்சியம் எம்.ஆர்.எம். அப்துற்-றஹீம் / 201

16. இலக்கியச் சிகரம் மு.மு. இஸ்மாயீல் / 213
17. பன்மொழி அறிஞர் எம். அப்துல் வஹ்ஹாப் / 227
18. இலக்கியச் சுடர் ஹஸன் / 237
19 திருப்பத்தூர் வி. நூர் முஹம்மது / 251
20. கவிஞர் திலகம் சாரணபாஸ்கரன் / 261
21. இறையருட் கவிமணி கா. அப்துல் கபூர் / 275
22. ஆன்மிகக் கவிஞர் இபுனு ஜமாலுத்தீன் / 287
23. வடகரை எம்.எம். பக்கர் / 299
24 திருச்சி குலாம் ரசூல் / 311
25. ஆர்.பி. மல்லாரி ரஷீத் / 321
26. நாவலர் ஏ.எம். யூசுப் / 331
27. சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது / 341
28. ஆலிம் கவிஞர் ஜி.எம்.எஸ். சிராஜ் பாக்கவி / 355
29. சீதக்காதி நூன் / 369
30. சிறுகதைச் செல்வர் ஜேயெம் / 379

சீதக்காதி நூன்

"சூடர்விடும் வைரத்திற்கு இயற்கையாக ஒளிவீசும் திறன் உண்டு. ஆயினும் அதை நீலநிற வெல்வெட் மீது வைத்துக் காண்பித்தால் அதன் ஒளி, மிகுந்து காணப்படுகிறது. இது போலவே இஸ்லாமிய வரலாற்றில் நிரவிக்கிடக்கும் நெஞ்சைத் தொடும் சம்பவங்களை அவற்றின் சூழ்நிலையுடன் ஆற்றல்மிக்க எழுத்தாளர் ஒருவர் எழுத்தோவியமாக வடித்துக் காட்டும்போது அச்சம்பவங்கள் புதிய மெருகுபெற்று விளங்குகின்றன. அன்பர் 'நூன்' அவர்கள், நபி பெருமானார் காலத்திலும் அவர்கள்தம் தோழர்கள் வாழ்க்கையிலும் நடந்த நெஞ்சை உருக்கும் சம்பவங் களைத் தம்முடைய எழுத்துத் திறமையால் அழியாச் சித்திரங் களாகத் தீட்டியிருக்கிறார். அவருடைய பேனாவிலிருந்து வந்த பின் அச்சம்பவங்கள் விசேட முக்கியத்துவம் பெறுகின்றன. நெஞ்சிலே நிலைத்துவிடுகின்றன. ஒவ்வொரு சம்பவத்தையும் அன்பர் 'நூன்' சுவையான சிறுகதையின் அமைப்போடு கவிஞ னின் உள்ளுணர்வோடு எழுதியிருக்கிறார். நல்ல நடை, சில இடங்களில் விறுவிறுப்போடு பாய்ந்து செல்லும் புதுவெள்ளத் தின் ஓட்டம். சில இடங்களில் பரந்துவிழும் நீர் வீழ்ச்சியின் கம்பீரம், சில இடங்களில் வசன காவியமாகவே மாறிவிடுகிறது".

ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஓர் எழுத்தாளரின் நூலுக்கு மற்றொரு எழுத்தாளர் ஒரு பத்திரிகையில் எழுதிய

மதிப்புரை இது. மதிப்புரை வழங்கிய எழுத்தாளர் மஹதி. நூல் : 'மதீனாவை நோக்கி...'

'நூன்' எனும் புனைப்பெயரில் எழுதிவந்தவர் நூ.பீ. ஷெய்கு அப்துல் காதிர் ஆவார். சீதக்காதி, ஷேக் பி. நூருத்தீன் முதலான பெயர்களுக்கும் அவர் உரியவர்.

முஸ்லிம் தமிழ் எழுத்தாளர்களில் ஓர் இலக்கியப் புதுமையை செய்த பெருமை 'நூன்' அவர்களுக்கு உண்டு. சரித்திரச் சம்பவங்களை சக்திவாய்ந்த சிறுகதைகளாக எழுதும் உத்தியை வகுத்துக் கொண்டு அதில் வெற்றி கண்டவர் அவர். 'மதீனாவை நோக்கி' அதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

1943 ஆம் ஆண்டில் எழுத்துலகில் பிரவேசித்தார் அவர். எனினும், இஸ்லாமியச் சிறுகதைத் துறையில் 1950 களில்தான் இடம்பிடித்தார். கடமை, பவுன் ஹாஜியார், நிறைவு, நினைவுப் பரிசு, கானல் நீர், பிரிவும்-பரிவும், மலராத மொட்டு என அவருடைய சிறுகதைப் பட்டியல் நீள்கிறது.

இதழாசிரியர்

அவரைப் பற்றி 'மணிவிளக்கு' ஆசிரியர் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது எழுதினார்:

"இஸ்லாமிய இலக்கியத் துறைக்காக தம் முழு நேரத்தையும் முழுக்க முழுக்க அர்ப்பணித்த ஒருவரை நினைவு கூரமுடியுமா என்று என்னிடம் கேட்டால், சந்தேகத்திற்கு இடமில்லாமல் நான் சட்டென பதில் சொல்வேன். அவர் பெயர் 'நூன்' என்று". 'நூன் வல் கலம்' என்ற திருக்குர்ஆன் வசனத்தை நினைவூட்டும் அந்தப் புனைப்பெயருக்குச் சொந்தக்காரர், அபிராம நத்தம் நூ.பீ. ஷெய்க் அப்துல்-காதிர் அவர்கள்.

தென்னகத்திலேயே குறிப்பிடத்தக்க பெருந்தனக்காரராக விளங்கிய துபாஷ் காதிர் அவர்களின் தலைமகள் வயிற்றுப் பேரர் அப்துல் காதிர். பட்டப்படிப்புக்குப் பிறகு ஆங்கிலத்தில்

எழுத்தாளராக மாறிய அவர், 'டெக்கான் டைம்ஸ்' பத்திரிகையின் துணையாசிரியராக தம் சேவையைத் தொடர்ந்தார். நம் சமுதாயம் கண்ட மாபெரும் எழுத்தாளர் ஏ.ஏ. ரவூஃப் அவர்களால் பயிற்றுவிக்கப்பட்டு, ஜலால் ஜக்கரியா அவர்களின் வழி காட்டுதலில் தம் திறமையை வளர்த்துக்கொண்ட நூர்.பீ. பிரபல ஆங்கிலப் பத்திரிகைகள் அனைத்திலும், கதை, கட்டுரைகள் வரையும் ஆசிரியராக உயர்ந்தார்.

திருக்குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றில் அவர் கொண்ட ஈடுபாடு, *The Un Lettered Prophet, The Inheritors of Gardon* (எழுத்தறியா நபி – சுவனத்தின் வாரிசுகள்) என்ற இரு நூற்களாகப் பரிணமித்தது.

டெக்கான் டைம்ஸுக்குப் பிறகு 'கிரஸன்ட்' வார இதழிலும் அவர் சேவை தொடர்ந்தது. அஹமதாபாத்தில் தொடங்கப் பட்ட 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பதிப்பின் ஆரம்ப துணையாசிரியராகவும் அவர் சேவையாற்றினார்.

ஆங்கிலத்திலேயே எழுதி வந்த அவரைத் தமிழில் எழுதத் தூண்டி வெற்றி பெற்றேன் என்ற பெருமித உணர்வு என் நெஞ்சத்தில் என்றும் உண்டு.

முதன் முதலாக அவர் எழுதிக் கொடுத்த கட்டுரையைப் படித்துவிட்டு, பாதித் தமிழாக இருக்கிறதே! எனப் பரிகசித்து விட்டேன். பின்னர் அதைப் பற்றி நான் வருந்தி மன்னிப்புக் கேட்டது உண்டு. ஆனால், அந்த நிகழ்ச்சிக்கு இரு மாதங்களுக்குப் பிறகு அவர் எழுத்தின் இலக்கிய நயத்தைக் கொண்டாடியவர் என்னைப் போன்று யாரும் இருக்க முடியாது. கதைகளை எழுதத் தொடங்கி 'சீதக்காதி' என்ற புனைப் பெயரை முத்திரையாகப் பதித்துக் கொண்டார்.

சிங்கப்பூர் 'மலாயா நண்பன்' தினசரியில் ஆசிரியராகவும், சிலகாலம் அவர் செயலாற்றினார். அந்தத் தமிழ் தினசரியின் தலையங்கத்தை அவர் எழுதிய முறை புதுமையானது.

ஆங்கிலத்தில் எழுதி, அதைத் தமிழில் மொழி பெயர்த்துக் கொடுப்பார். ஆரம்பத்தில் ஆங்கிலத்திலேயே சிந்தித்து எழுதிப் பழகியதன் விளைவு அது."

சரித்திரக் கதைகள்

'இரத்தமணல்' என்ற தலைப்புடைய அவருடைய சரித்திரச் சிறுகதையைப் படித்தவர்கள் வாழ்நாளில் அதை மறக்கவே முடியாது. இரத்த மணல் என்றதும் அவரவர் சிந்தனையும் பல திசைகளில் சஞ்சரிக்கலாம். ஆனால் கர்பலா களத்தை பளிச்சென்று சிலர் நினைக்கக் கூடும்.

இமாம் ஹுஸைனாரின் தியாக மரணத்தை, கர்பலா களத்தின் கண்ணீர்க் கதையாக, இரத்த மணலாக எழுத்தில் வடித்தார் நூன். பக்கம் பக்கமாக அந்தத் சோக, தியாக, தீர வரலாற்றைக் கட்டுரையாகவும், நூலாகவும் எழுத முடியும் என்றாலும் கட்டுக்கோப்பான சிறுகதையாக அதனை எழுதிய சிறப்பு அவருக்கு உண்டு. உணர்ச்சிமயமான சிறுகதை அது.

சரித்திரச் சிறுகதைகளில் திருப்புமுனையான ஒரு பணியைச் செய்து வெற்றிகண்ட 'நூன்' சமூகச் சிறுகதைகள் எழுதுவதிலும் பின்வாங்கவில்லை.

ரங்கூனில் நெடுங்காலம் வாழ்ந்த அவர் தமிழ்நாட்டிற்கும் பர்மாவுக்கும் இலக்கிய, கலாச்சார பாலம் அமைப்பதுபோல் நல்ல பல பாத்திரங்களைக்கொண்டு நறுக்கான சிறுகதைகளைப் படைத்திருக்கிறார்.

மணிவிளக்கு இதழில் ஆஸ்தான எழுத்தாளர் இடத்தைப் பிடித்திருந்த அவர், பிறை, முஸ்லிம் முரசு முதலான இஸ்லாமிய இதழ்களில் தொடர்ந்து எழுதியவை வாசகர்களுக்குப் பரிச்சய மானவை. இலக்கியப் படைப்புகளை வாரிவழங்க வேண்டும் என்ற விருப்பத்தின் பேரில்தான் 'சீதக்காதி' என்ற புனைப் பெயரை வரித்துக்கொண்டார் என்று எண்ணத் தோன்றுகிறது.

ஹஜ் சிறுகதை

1975 ஆம் ஆண்டில் ஆனந்த விகடன் ஹஜ் சிறப்பிதழ் வெளியிட்டபோது 'நிறைவு' என்ற அவருடைய சிறுகதை இடம்பெற்றிருந்தது. தியாகத் திருநாளான ஹஜ் பெருநாள் தத்துவங்களைச் சித்தரிக்கும் அந்தக் கதை வாசகர்களை வெகுவாகக் கவர்ந்தது.

(அப்போது நான் விகடன் துணை ஆசிரியர்) "மேட்டுத்தெரு மீரான்ஷாவின் அந்த முடிவு ஊர் மக்களை வியப்பில் ஆழ்த்தியது" என்று கதை ஆரம்பமாகிறது. எந்த முடிவு என்று தொடக்கத்திலேயே ஆர்வம் தூண்டப்படுகிறது.

....இன்னும் ஒரு மாதத்திற்குள் அவர் மக்காவிற்குப் புனிதப் பயணம் புறப்பட இருந்தார். வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு அவருக்கு மாலைகள் அணிவித்து பள்ளிவாசலிலிருந்து பைத்து ஓதியவாறு ஊர்வலமாகப் பேருந்து நிலையத்துக்கு அழைத்துச் செல்வதென்றும், அங்கிருந்து ஊராரின் சார்பில் ஒரு சிலர் ரயிலடி வரை சென்று அவரை வழியனுப்பி வைப்பதென்றும் ஊர் ஜமாஅத்தார்கள் தீர்மானித்திருந்தனர். ஆனால், வெள்ளிக்கிழமை நெருங்கியபோது 'இந்த வருடம் அவர் ஹஜ்ஜுக்குப் போகலையாம்' என்று பள்ளிவாசல் கல்மண்டபத்தில் பேச்சு. 'ஒரு முக்கிய விஷயமா நான் ஊரிலே தங்க வேண்டியதாப் போச்சு' என்று மீரான்ஷா பேச்சை நிறுத்திக்கொள்கிறார்.

வளர்த்த பாசத்தை, சொந்த விருப்பத்தை ஒழித்துத் தனக்குப் பிரியமான எதையும் மனிதன், இறைவனுக்கு அர்ப்பணிக்கத் துணிய வேண்டும் என்பதுதானே தியாகத் திருநாளின் தத்துவம். மீரான்ஷாவிற்கு இபுறாஹீம் நபியின் நினைவு வந்தது. அவர் தியாகம் புரியத் தயாராகிறார். எந்த வசதியுமின்றி திருமணத்திற்குக் காத்து நிற்கும் தம் ஒன்றுவிட்ட தங்கை மகளுக்கு மணம் முடித்துவிட மீரான்ஷா முடிவு செய்கிறார். ஏன்?

கதையின் பிற்பகுதி :

'குத்பா பிரசங்கத்தில் இமாம் சொன்ன சம்பவம் அவர் நினைவுக்கு வந்தது. செருப்பு தைத்து வயிற்றுப் பிழைப்பு நடத்திய அஹமது அஷ்ரக் என்பவர் ஹஜ் செல்லும் நாட்டத்தில் நாற்பது வருடமாகச் சிறுகச் சிறுகப் பணம் சேர்த்து வந்தார். ஆனால், அண்டைவீட்டார் பல நாட்களாகப் பட்டினி கிடப்பதாக அறிந்தபோது அந்தப் பணத்தையெல்லாம் அவர்களின் தேவைக்காக எவ்வித தயக்கமும் இல்லாமல் தந்துவிட்டார். ஹஜ் செல்லாமலே அதன் பயனை இறைவன் அவருக்கு அளித்து விட்டான். அத்தகைய பெரும்பேறு தமக்குக் கிடைக்காவிட்டாலும் என்றாவது புனிதப் பயணம் செல்லும் வாய்ப்பைத் தமக்கு இறைவன் தராமல் இருந்துவிடமாட்டான் என்று நினைத்துக்கொண்ட மீரான்ஷாவின் நெஞ்சில் ஆண்டவனுக்காக தமது விருப்பத்தை விட்டுக் கொடுத்து அவன் வழியில் தம்மால் இயன்றதைச் செய்துவிட்ட நிறைவு பரவியது".

'இலக்கிய சீதக்காதி' நூன் கணிசமான அளவுக்குச் சமூகச் சிறுகதைகளை எழுதினார். பவுன் ஹாஜியார், கிடைக்காத செல்வம், நினைவுப் பரிசு. மலராத மொட்டு, கடமை, பிரிவும் பரிவும் ஆகியவை இந்த இலக்கிய சீதக்காதியின் மறக்க முடியாத சிறுகதைகள்.

பல சரித்திரப் புதினங்களையும் அவர் படைத்தார். வெற்றிக்கு மேல் வெற்றி, வெற்றிப் பரிசு, வெற்றிப் பிறை, அந்தி வானம், ரஜியா சுல்தானா ஆகியவை அவற்றுள் அடங்கும்.

முஸ்லிம் முரசு இதழில் 1984–85 இல் நூன் எழுதிய 'ரஜியா சுல்தானா' மறக்க முடியாத சரித்திரத் தொடர்கதை. அதன் சில பத்திகள்.

நாளுக்கு நாள் பொது மக்களுக்கு அரசியாரின் மீதிருந்த அன்பும் அபிமானமும் பெருகி வந்தது.

அம்மக்களின் கல்விப் பிரச்சினையில் ரஜீயா சுல்தானா குறையாத கவனம் செலுத்திக்கொண்டிருந்தார்.

அப்போது குவாரியிலிருந்து பேரறிஞர் மின்ஹாஜுல் ஸிராஜ் என்பாரை சுல்தானா மீண்டும் தலைநகருக்கு வரவழைத்தார். சுல்தான் இல் தூமிஷனி காலத்திலேயே அரச ஆதரவு பெற்று 'தபக்காதே நஸ்ரி' எழுதியவர். உண்மையில், அம்மன்னர் உலமாக்களுக்கு மட்டுமின்றி, அறிஞர்களுக்கும் மரியாதை அளித்து வந்தார்.

அவர் நிறுவிய நஸீர் கல்லூரியின் தலைவராக மின்ஹாஜுல் சிராஜை நியமித்தார். அதன் விளைவாக அக்கல்லூரி புதிய உத்வேகம் பெற்றது.

அதேபோல் இதர இலக்கியத் துறைகளிலும் புலமை மிக்க பலரின் சேவைகள் பயன்படுத்தப்பட்டன.

தந்தையார் காலத்திலே அரசவையில் இடம்பெற்றிருந்த கவிஞர் ரூஹானி, மாலிக் தாஜுத்தீன், ரியாஜ், 'ஜாமியுல் ஹிக்காயத்' எழுதிய கல்ஃபி போன்ற அப்புலவர்களுக்கு ரஜியா சுல்தானாவின் தர்பாரிலே பெரும் அரச மரியாதையும் மதிப்பும் தரப்பட்டன.

நுண்மதியும் அறிவுத் தெளிவும் படைத்திருந்த அரசியார் கலைகளையும் கலைஞர்களையும் தாம் போற்றி வந்ததை மறைக்கவில்லை. அறிவு மேதைகளுடன் நேரத்தைக் கழிப்பதில் மகிழ்வு கண்ட அவர், அவர்களுக்கு கற்பனை கூடிய கலைகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகளையும் அளித்து வந்தார்.

ரஜியா சுல்தானாவுக்கு ஊர்வலம் அல்லது இராணுவ வீரர்களின் படைநடப்புக்கேற்ற திறந்த வெளி வாத்திய இசையில் மிகுந்த நாட்டம் அது மத்தளம் போன்ற டோலக், சிறு வீணை யொத்த சாரங், நாதசுரம் போலிருக்கும் ஷெனாய், மற்றும் ஜாலரா கூடியதாக இருக்கும். இப்படி சுவைபடத் தொடர்கிறது ரஜியா சுல்தானா.

நூன் ஆங்கில மொழியிலும் பல சிறுகதைகளை பிரபலமான

இதழ்களில் எழுதினார். பாம்பே கிரானிக்கல், மை இந்தியா, ஓரியண்ட ரிவியூ, சண்டே நியூஸ் ஆஃப் இந்தியா, சிங்கப்பூர் ஃபிரிபிரஸ், கிரசென்ட், சுவதந்த்ரா முதலான இதழ்களில் இவை இடம்பெற்றன. மை இந்தியா இதழில் பிரசுரமான நூனின் சிறு கதைகளுக்கு சித்திரங்களை வரைந்து சிறப்பித்தார், புகழ்பெற்ற கேலிச் சித்திரக் கலைஞர் ஆர்.கே. லட்சுமணன்.

நபிமணித் தொடர்கதை

நபி நாயகம் அவர்களைப் பற்றி நூன் எழுதிய தொடர்கள் அரிய, இனிய, வரலாற்றுப் பதிவுகள். அவருடைய நடையும் பாணியும் தனித்தன்மை வாய்ந்தவை. நபிமார்களின் வரலாற்றை திருக்குர்ஆன் வசனங்களின் பின்னணியில் தமிழிலும் ஆங்கிலத்திலும் தொகுத்து வழங்கிய சிறப்பு அவருக்குரியது. 'மறையொளியில் இறை நபி' மனங்கவரும் நூல்.

'அண்ணல் முஹம்மது எனும் அழகிய முன்மாதிரி' ஷெய்க் அப்துல் காதிர் அவர்களின் முத்திரைத் தொடர். நபிமணி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை 63 அத்தியாயங்களில் மணி விளக்கு இதழில் எழுதிவந்தார். மணிவிளக்கு, அறமுரசு இதழ்களில் பணியாற்றியதால் கட்டுரைகளையும், சிறுகதைகளையும் தொடர்ந்து எழுதி அணிசேர்க்கும் கட்டாயம் அவருக்கு இருந்தது.

நபிமார்களின் வரலாற்றை திருக்குர்ஆன் வசனங்களை ஆதாரமாகக்கொண்டு ஆங்கில மொழியில் தொகுத்ததை அறிவோம். பன்மொழி எழுத்தாளர், பத்திரிகையாளர், இலக்கிய வாதி என பல்துறைச் சிறப்புக்குரியவர் சீதக்காதி நூன். அல் ஹாஜ் பி.எஸ்.ஏ. அப்துல் ரஹ்மான் சென்னையில் நடத்தி வந்த ***National Economic Forum*** மாத இதழின் ஆசிரியராகவும் துபாஷ் தாஜுத்தீனுடன் இணைந்து பணியாற்றினார்.

பர்மாவில் அவர் ஆற்றிய பலதுறைப் பணி தனி அத்தியாயம். அங்குள்ள இந்தோனேசியத் தூதரகத்தில் 14 ஆண்டுகள்

1967 வரை பணியாற்றினார். ரங்கூன் சோலியா முஸ்லிம் சங்கத்தின் துணைத் தலைவராகவும் இருந்து வந்தார். அபிராமம் நத்தத்தில் 24.9.1920 இல் பிறந்த நூ.பீ. ஷேக் அப்துல் காதிர் 1.2.1986 இல் காலமானார்.

அண்ணலார் முஹம்மது எனும் அழகிய முன்மாதிரி தொடரை 9 ஆண்டுகளாக அவர் எழுதிக்கொண்டிருந்த காலம் அது. "நூன் பேனா ஓய்ந்தது!" என்று இரங்கல் உரை எழுதியது மணிவிளக்கு.

"மணிவிளக்கு தொடங்கிய நாளில் இருந்து, அவர் இறுதி மூச்சு இழையோடிய நாள்வரை இடையறாத தொடர்பு கொண்டிருந்தவர் நண்பர் நூ.பீ. ஷெய்கு அப்துல் காதிர். இன்னும் சொல்வதாயின், அவர் மறைந்த பிறகும் மணிவிளக்கில் வெளியிட கட்டுரைத் தொடர் தந்து சென்றிருக்கும் "சீதக்காதி யாக அவர் விளங்குகிறார்" என எழுதினார், ஆசிரியர் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது.

இலக்கிய சீதக்காதி நூன் அவர்களின் அனைத்துத் தொடர் களும் இலக்கியப் படைப்புகளும் நூல் வடிவில் பாதுகாக்கத் தக்கவை.

தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட
சைவருக்கோ, வைணவருக்கோ, கிறித்தவருக்கோ
மற்றும் எந்த மதத்தவர்க்கோ உள்ள தமிழ்ப்பற்றைவிட,
எந்த வகையிலும் குறைந்ததன்று, முஸ்லிம்
தமிழ் மக்களின் தமிழ்ப்பற்று.

முஸ்லிம் படைப்பாளிகள் சிறுகதை, புதினம், கவிதை,
பாடல், காப்பியம், நாடகம், கட்டுரை, திறனாய்வு எனப்
பல்வேறு தளங்களில் இயங்கி வரலாறு படைத்திருக்கின்றனர்
என்பதோடு, இதழியல், அரசியல், மார்க்கவியல், சமுதாயவியல்
பார்வைகளிலும் செயல்பட்டிருக்கின்றனர் என்பதை
இத்தொகுப்பு எண்பிக்கிறது.

– ஈரோடு தமிழன்பன்